# பஸ்பாகே கோரளை பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜூலை 24 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------

1.3.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டு பெறுமதி ரூபா 37,761,975 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,903,425 ஆக காணப்பட்டது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்கு

-----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 27,851,933 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் ரூபா 2,399,143 இற்காக 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளும் காணப்பட்டன.

1.3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------

இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் viii பந்தி 10 இன் பிரகாரம், தலைவரின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல், வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை 09 நாட்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 30,349 இற்கான தொகையொன்று நிறைவேற்று மற்றும் வெளிக்கள அலுவலர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதிய முடிவடையும் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞசிய வருமானம் ரூபா 10,560,300 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,468,766 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 908,466 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------

(அ) மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டிற்கான மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 908,466 இற்கான குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக 2013 ஆண்டின் போது ஏனைய வருமானங்கள் நூற்றிற்கு 19 இனாலும் மற்றும் அனுமதிப் பத்திர கட்டணம் நூற்றிற்கு 15 இனாலும் குறைவடைதல் மற்றும் 05 செலவு விடயங்கள் நூற்றிற்கு 46 இற்கான வீச்சில் செலவுகள் அதிகரித்தல் அடிப்படை காரணமாக அமைந்துள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வட்டி செலுத்தல் பங்குலாபம் மற்றும் மிகை ஊதியம் செலுத்தல் ரூபா 1,588,954 இனால் அதிகரித்து காணப்பட்டது. சபை கட்டடத்தின் நிர்மான வேலைக்காக உள்நாட்டுக் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடனை திருப்பிச் செலுத்தல் இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

----------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துகளுடன் நடைமுறை பொறுப்புக்கள் காணப்படும் விகிதாசாரம் 1.4:1 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் விகிதாசாரமாக 1.9:1 உச்ச மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டமையால் ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்களின் 86% ஆகிய ரூபா 37 மில்லியன் நிர்மாண வேலை மற்றும் பலவின கடன் பட்டோராக காணப்பட்டதுடன் மொத்த நடைமுறை பொறுப்புகளில் 93% ஆகிய 27 மில்லியன் நிர்மாண வேலை மற்றும் பலவின கடன் கொடுத்தோர் அடங்கியிருந்தது.

2.4 வருமான நிருவாகம்

----------------------------

2.4.1 வீதவரி

----------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 268,211 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டிற்கான பில் போடப்பட்டவைகள் ரூபா 531,644 ஆகும். ஆண்டின் போது அறவீடுகளின் சதவீதம் சுமார் 60% ஆகக் காணப்பட்டதுடன், 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்படவேண்டிய ரூபா 342,883 இற்கான மீதி தொடர்பாக 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) மற்றும் 159(1) பிரிவுகளின் பிரகாரம் 2014 மே 31 திகதி வரை அறவீடு செய்வதற் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.4.2 வாடகை

------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 31,260 இனை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்ட்டிருக்கவில்லை.

2.4.3 நீர்க் கட்டணம்

---------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 1,901,381 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் இறுதியில் நிலுவை ரூபா 1,264,259 ஆகக் காணப்பட்டது. நிலுவை தொகையில் அறவீடுகள் 33% இற்கான பலவீன மட்டத்தில் காணப்பட்டது எனினும் அத் தொகையை அறவீடு செய்வதற்காக முறையான செயல்முறை ஒன்றினை சபை செயற்படுத்தியிருக்கவில்லை.

2.4.4 நீதி மன்றத் தண்டப்பணம் முத்திரை கட்டணம்

---------------------------------------------------------------------

மாகாண சபையின பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்ற தண்டப்பணம் ரூபா 2,900,000 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 7,000,000 என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

3 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

2012 ஆண்டின் போது 10 நுகர்வோர்களினால் நீர் வழங்கள் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 37,000 தொகையொன்று சபைக்கு செலுத்தியிருந்தது அத்துடன் 2014 ஆண்டு வரையும் அவ்

வழங்கல்களை பெற்றுக் கொடுக்காமல் குறிப்பிட்ட பணத்தை வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.

3.2 செயற்திட்டங்களின் தாமதம்

-----------------------------------------

சபை நிதியத்தில் இருந்து பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 2012 ஆம் ஆண்டு தொடர்பான ரூபா 230,750 பெறுமதியான 09 நிர்மாண வேலைகள் / செயற்திட்டங்கள் மற்றும் மீளாய்வாண்டிற்கான ரூபா 466,823 பெறுமதியான 12 நிர்மாண வேலை செயற்திட்டங்கள் 2014 மே வரையும் செயற்படுத்தி இருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரித்திருந்த பாதீடு மற்றும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது, 04 விடயங்களில் நூற்றிற்கு 26 முதல் நூற்றிற்கு 50 வரையான வீச்சுடனான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

--------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) செயற்திட்ட முகாமைத்துவம்